# குங்குமம்

11-06-2012






# குங்குமம்

11-06-2012


'1100க்கு மேல் மார்க் வேண்டும்; அதிலும் நல்ல கட் ஆஃப் வேண்டும்; டாப் ரேங்க் கல்லூரிகளில் இடம் வேண்டும்; படிக்கும் போதே கேம்பஸில் செலக்ட் ஆகி, நல்ல நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்துவிட வேண்டும்'

– அநேகமாக தமிழகத்தில் பிளஸ் 2 தேர்வு எழுதிய அத்தனை மாணவர்களின் பெற்றோருக்கும் இதுவே கனவாக இருக்கிறது. "மருத்துவம், பொறியியலைத் தாண்டி நூற்றுக்கணக்கான சிறந்த வாய்ப்புகள் இருக்கின்றன. கடிவாளம் கட்டிய குதிரை மாதிரி எல்லோரது சிந்தனையும் இந்த இரண்டின்மீதே இருப்பதால், பலருக்கும் அந்த அற்புத வாய்ப்புகள் தெரிவதில்லை" என்கிறார்கள் கல்வி ஆலோசகர்கள்.



"இன்றைய சூழலில் சி.ஏ மிகச்சிறந்த ஆப்ஷன்..." என்பது கல்வி ஆலோசகர் சத்யநாராயணனின் கருத்து. "இப்போது இந்தியாவுக்கு 7 லட்சம் ஆடிட்டர்கள் தேவை. ஆனால் ஒன்றரை லட்சம் பேர்தான் இருக்கிறார்கள். சி.ஏ. முடிக்க கடும் உழைப்பு தேவை. சென்னையில் உள்ள இன்ஸ்டிட்யூட் ஆஃப் சார்ட்டட் அக்கவுண்ட்ஸ்

ஆஃப் இந்தியா (ஐசிஏஐ) என்ற நிறுவனம் இப்படிப்பை வழங்குகிறது. முதலில் சி.பி.டி என்ற தேர்வை எழுதவேண்டும். மொத்தம் 200 மதிப்பெண்கள். ஆப்ஜெக்டிவ் முறையில் தேர்வு நடக்கும். தவறான பதில்களுக்கு மதிப்பெண் குறைக்கப்படும். இதில் 50 சதவீதம் மதிப்பெண் பெற்றால், அடுத்த 9 மாதத்தில் ஐ.பி.சி.சி தேர்வு. இதில் ஏழு பாடங்கள். இதற்கான பயிற்சியை ஐசிஏஐ வழங்கும். இதில் 40 சதவீதம் மதிப்பெண் பெற்றால், அடுத்த கட்டமாக ஒரு ஆடிட்டரிடம் 3 வருடங்கள் நேரடிப் பயிற்சி பெறவேண்டும். இந்த நேரத்தில் தொலைதூரக் கல்வி மூலம் ஒரு டிகிரி படிக்கலாம். 3 வருட பயிற்சிக்குப் பிறகு சி.ஏ. முதன்மைத்தேர்வு. இதில் எட்டு பாடங்கள். 40 சதவீதம் மதிப்பெண் பெறவேண்டும். அதன் பிறகு உன்னதமான எதிர்காலம் இருக்கிறது" என்கிறார் அவர்.

பாராமெடிக்கல் எனப்படும் மருத்துவம் சார்ந்த துணைப் படிப்புகளுக்கும் மிகப்பெரும் வாய்ப்பு இருக்கிறது. பலர் இப்படிப்புகளை கௌரவக் குறைச்சலாக நினைக்கிறார்கள். உண்மையில் படித்தவுடனே வேலையில் இணையும் வாய்ப்புள்ள படிப்புகள் இவை. மருத்துவத்துறையில் இந்தியா நம்பர் 1 நாடாக வளர்ந்து வருகிறது. வெளிநாடுகளிலும் ஏகப்பட்ட வேலைவாய்ப்புகள் உண்டு.


இந்த ஆண்டு குறிப்பிட்ட மருத்துவமனைகளில் பாராமெடிக்கல் கோர்ஸ்களை நடத்த அங்கீகாரம் வழங்கியுள்ளது தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம். சென்னையில் உள்ள சங்கர நேத்ராலயா, மியாட், அப்போலோ, விஜயா மருத்துவமனை நிர்வாகங்கள் படிப்புகளைத் தொடங்கியுள்ளன. வங்கியில் கல்விக் கடன் பெறும் வசதியும்

## குட் சாய்ஸ்!



- ☑ சி.ஏ.
- ☑ லேப் டெக்னாலஜி
- ☑ ஆப்டோமெட்ரி
- ☑ ஹியூமன் ரிசோர்ஸ்
- ☑ சோஷியாலஜி
- ☑ ஸ்பெஷல் எஜுகேட்டர்
- ☑ கிரிமினாலஜி
- ☑ ரீடெயில் மார்க்கெட்டிங்
- ☑ பைனான்ஷியல் அக்கவுண்டிங்
- ☑ சைக்காலஜி
- ☑ இன்டீரியர் டெக்னாலஜி
- ☑ மல்டிமீடியா மேனேஜ்மென்ட்


சத்யநாராயணன்


மகாலிங்கம்


ஜெயப்பிரகாஷ்

www.kungumam.co.in

உண்டு. "சங்கர நேத்ராலயா அகாடமியில் கண் மருத்துவ செவிலிய உதவியாளர், ஆபரேஷன் தியேட்டர் மற்றும் மயக்க மருந்தியல் டெக்னாலஜி, பி.எஸ்சி. லேப் டெக்னாலஜி ஆகிய கோர்ஸ்களைத் தொடங்கியுள்ளோம். பிட்ஸ் பிலானி பல்கலைக்கழகத்தோடு சேர்ந்து பி.எஸ்சி ஆப்டோமெட்ரி என்ற பட்டப்படிப்பையும் வழங்குகிறோம். அறிவியல் பிரிவு படித்தவர்கள் இவற்றில் சேரலாம். எங்கள் மருத்துவமனையிலேயே வேலைவாய்ப்பும் வழங்கப்படும்" என்கிறார் இந்த அகாடமியின் அலுவலர் மகாலிங்கம்.

"பி.ஏ. மற்றும் பி.எஸ்சி கோர்ஸ்களைப் பொறுத்தவரை மேற்படிப்பு அவசியம். படித்துவிட்டு வீட்டில் அமர்ந்துவிடக் கூடாது. அப்டேட் செய்து கொள்ள வேண்டும். அப்போதுதான் வேலைவாய்ப்புகளைப் பெறமுடியும். பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, எக்கனாமிக்ஸ் போன்ற படிப்புகளுக்கும் தேவை இருக்கிறது. பி.காம் மற்றும் அது சார்ந்த பிரிவுகளின் மதிப்பும் குறையவில்லை..." என்கிறார் ஜெயப்பிரகாஷ் காந்தி.

"இப்போதுள்ள சூழலில் நேர்மையாகச் சொல்ல வேண்டும் என்றால் பி.ஏ இலக்கியம், வரலாறு போன்ற படிப்புகளுக்கு வேலை வாய்ப்பு சற்றுக் குறைவுதான். பயோ டெக்னாலஜி படிப்பவர்கள், முதுகலை படித்



தால்தான் வேலைக்குச் செல்ல முடியும். எனவே, ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் படிப்புகளைத் தேர்வு செய்யும்போது கவனம் தேவை'' என்கிறார் சத்யநாராயணன்.

சேலத்தைச் சேர்ந்த கல்வி ஆலோசகர் செந்திலும் இதையே வழிமொழிகிறார். ''ஹியூமன் ரிசோர்ஸ், சோஷியாலஜி படிப்புகளுக்கு சிறந்த எதிர்காலம் இருக்கிறது. ஐ.டி நிறுவனங்களுக்குக் கூட சமூக சேவகர்கள் தேவைப்படுகிறார்கள். அதே போல், கற்றல் குறைபாடு தொடர்பான சிறப்பாசிரியர் படிப்புக்கும் தேவை அதிகரித்து வருகிறது. *10* சதவீதம் குழந்தைகள் கற்றல் குறைபாட்டோடு இருப்பதாக ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது. அதனால் ஒவ்வொரு பள்ளியில் ஒரு ஸ்பெஷல் எஜுகேட்டர் நியமிக்க இருக்கிறார்கள். கோவை அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், திருச்சி ஹோலிகிராஸ் சொசைட்டி உள்ளிட்ட பல கல்வி நிலையங்களில் பி.எஸ்சி ஸ்பெஷல் எஜுகேட்டர் கோர்ஸ் இருக்கிறது.

கிரிமினாலஜியும் பிரகாசமான எதிர்காலம் உள்ள படிப்பு. சென்னைப் பல்கலைக்கழகத்தில் இருக்கிறது. ரீடெயில் மார்க்கெட் மிகப் பெரும் வளர்ச்சியை எட்டியுள்ள காலகட்டம் இது. அத்துறையில் ஏகப்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாகி வருகின்றன. கோவை பி.எஸ்.ஜி கல்லூரி உள்ளிட்ட பல கல்லூரிகளில் பி.காம் ரீடெயில் மார்க்கெட்டிங், பைனான்ஷியல் அக்கவுன்டிங் போன்ற படிப்புகள் உள்ளன. இவற்றைத் தேர்வு செய்யலாம்'' என்கிறார் செந்தில்.


செந்தில்


கலாவதி

''விஷுவல் கம்யூனிகேஷன், மாஸ் கம்யூனிகேஷன் படிப்புகளும் மதிப்பு வாய்ந்தவை. சைக்காலஜியும் கவனிப்பார் இன்றி கிடக்கிறது. எம்.என்.சி கம்பெனிகள், பள்ளிகளில்கூட சைக்காலஜிஸ்ட்டுகள் நியமிக்கப்படுகிறார்கள். கிளினிக்கல் சைக்காலஜி, சைல்ட் சைக்காலஜி, பாரன்சிக் சைக்காலஜி என அதில் பல பிரிவுகள் உள்ளன. சில கல்லூரிகளில் எம்.எஸ்.சி. சைக்காலஜி இன்டகரேட்ட் கோர்ஸே வைத்திருக்கிறார்கள். தாராளமாக இதைத் தேர்வு செய்யலாம். பி.எஸ்சி இன்டீரியர் டெக்னாலஜி, மல்டிமீடியா மேனேஜ்மென்ட் படிப்புகளுக்கும் எதிர்காலத்தில் தேவையிருக்கிறது'' என்கிறார் கலாவதி.

நேரம் ஒதுக்கி யோசியுங்கள்... நிதானமாக முடிவெடுங்கள். பிரகாசமான எதிர்காலம் காத்திருக்கிறது. வாழ்த்துகள் மாணவர்களே..!

**- வெ.நீலகண்டன்**